RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

## MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 199 ஜூலை.25 2026 சனிக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# மேகதாது விவகாரம்: ஆகஸ்ட் 3இல் கர்நாடக முதல்வரை சந்திக்கும் முதலமைச்சர் விஜய்

சென்னை: ஜூலை.25-

மேகதாது விவகாரம் தொடர்பாக கர்நாடக முதலமைச்சர் டி.கே. சிவக்குமாரை ஆகஸ்ட் 3ஆம் தேதி நேரில் சந்திக்க முதலமைச்சர் ஜோசப் விஜய் முடிவெடுத்துள்ளார்.

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணையை கட்ட கர்நாடக மாநில அரசு முயற்சி செய்து வரும் நிலையில், தமிழ்நாடு அரசு அதற்கு எதிர்ப்பு தெரிவித்து பல்வேறு வகையில் சட்ட போராட்டங்களை நடத்தி வருகிறது.

அந்தவகையில், கர்நாடக அரசு காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டுவதை கைவிட வேண்டும், மத்திய நீர்வள ஆணையம் மேகதாது அணை கட்டுவது தொடர்பான அம்மாநில அரசின் விரிவான திட்ட அறிக்கைக்கு அனுமதி வழங்கக் கூடாது, புதிய நடுவர் மன்றத்தை அமைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த ஜூன் 19ஆம் தேதி நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தொடரில் தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் கொண்டு வந்த தனித்தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஜூலை 20ஆம் தேதி, மேகதாது அணை விவகாரம் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் தலைமையில் நீர்வளத்துறை அமைச்சர் ஆனந்த் உள்ளிட்ட முக்கிய துறை வாரியான அதிகாரிகளுடன் ஆலோசனை



நடந்தது.

இது தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் நிர்மல் குமார், "மேகதாது அணை விவகாரம் குறித்து முதலமைச்சர் ஒரு வாரத்தில் சில முக்கிய முடிவுகளை எடுப்பார்" என்று தெரிவித்திருந்தார்.

இதனிடையே கர்நாடக மாநிலத்தில் ஜூன், ஜூலை மாதத்தில் பெய்யக்கூடிய பருவமழை ஏமாற்றியதால், அணைகளுக்கு நீர்வரத்து இல்லாமல் தமிழ்நாட்டிற்கு தேவையான நீரை திறந்து விடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும், அணைகளில் உள்ள நீர் பெங்களூரு நகரின் குடிநீர் தேவைக்கு மட்டுமே போதுமானதாக உள்ளதால், தமிழ்நாடு விவசாய பாசனத்திற்கு நீரை திறந்து விட முடியாத சூழல் இருப்பதாக கர்நாடக அரசு தடாலடியாக அறிவித்தது.

இந்நிலையில், காவிரி நீர் பகிர்வு மற்றும் மேகதாது அணைத் திட்டம் குறித்து விவாதிப்பதற்காக, தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் ஆகஸ்ட் 3ஆம் தேதி கர்நாடகா சென்று அம்மாநில முதல்வர் டி.கே சிவகுமாரை நேரில் சந்தித்து ஆலோசிக்க உள்ளதாக தகவல் வெளியானது.

இது தொடர்பாக கும்பகோணத்தில் செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்நாடு வேளாண் துறை அமைச்சர் வினோத், "மேகதாதுவில் புதிய அணை கட்டும் முயற்சியை முறியடிக்கவும், தமிழகத்திற்குரிய காவிரி நீரை பெறவும், ஆகஸ்ட் முதல் வாரத்தில், முதலமைச்சர் விஜய், கர்நாடக முதலமைச்சர் டி.கே. சிவகுமாரை நேரில் சந்தித்து வலியுறுத்த உள்ளார்" என தெரிவித்தார்.

ஆகஸ்ட் 5ஆம் தேதி, தமிழ்நாடு பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்கவுள்ள நிலையில், கூட்டத்தொடருக்கு முன்பாகவே முதலமைச்சர் ஜோசப் விஜய் கர்நாடக முதல்வருடன் மேகதாது அணை விவகாரம் குறித்து ஆலோசிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மழை பற்றாக்குறை ஏற்படும் ஆண்டுகளில் விகிதாச்சார அடிப்படையில் இரண்டு மாநிலங்களும் நீரை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பது விதிமுறை. இத்தகைய சூழலில் காவிரி நதிநீர் பங்கீடு மற்றும் மேகதாது அணை விவகாரம் குறித்து விவாதிக்க தமிழ்நாடு அரசுக்கு கர்நாடக அரசு அழைப்பு விடுத்துள்ளதாகவும் இதுகுறித்து கர்நாடக மாநில நீர் பாசன அதிகாரிகள், தமிழக அரசின் நீர்வளத்துறை அதிகாரிகளுக்கு மின்னஞ்சல் மூலம் அழைப்பு விடுத்துள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளன.

# 'ஜனநாயகன்' பார்த்தால் மூளை சுறுசுறுப்பாகும்: சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் கருத்து

சென்னை, ஜூலை.25-

"'ஜனநாயகன்' படம் பார்ப்பதன் மூலம் மூளைக்கு சுறுசுறுப்பு வரும். 'ஜனநாயகன்' படத்திற்கும், மாணவர்களின் போராட்டத்திற்கும் சம்பந்தமில்லை" என சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "தொழில்துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்த அரசு தயாராக இருக்கிறது. பட்ஜெட் கூட்டத்தொடரில் மக்கள் விரும்பும் மாற்றங்களை செய்ய, விரல் நுணியில் விவரங்களோடு, முதல்வர் முனைப்புடன் தயாராக இருக்கிறார்" என்றார்.

பின்னர், "மாணவர்களின் போராட்டத்தை 'ஜனநாயகன்' படம் மழுங்கடித்துவிட்டதா?' என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த அவர், 'ஜனநாயகன்' படம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டபடி ரிலீஸ் ஆகியுள்ளது. 'ஜனநாயகன்' படத்துக்கும், மாணவர்களின் போராட்டத்துக்கும் சம்பந்தமில்லை. 'ஜனநாயகன்' படம் பார்ப்பதன் மூலம் மூளைக்கு சுறுசுறுப்பும், விறுவிறுப்பும் வரும்.

மாணவர்கள் அல்லது மற்றவர்களின் மூளையை, மூளைச் சலவை செய்யும் படம் இல்லை. வார்த்தைகளின் மூலமாக செல்லுகிற பாதையின் திசையை திருப்புகிற முயற்சியில் யாரும் ஈடுபடக் கூடாது என்பதில் அக்கறையோடு இருக்கிறேன்" இவ்வாறு அவர் கூறினார்.

# "காங்கிரஸ்"க்கும் பாஜகவுக்கும் விசுவாசம் காட்டுகிறது த.வெ.க.,"

## அப்பாவு விமர்சனம்

சென்னை, ஜூலை.25-

"தமிழ்நாட்டில் தவெக ஆட்சி 'பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்' என்பது போல் காங்கிரஸுக்கும் பாஜகவுக்கும் விசுவாசம் காட்டுவதற்காக, தமிழ்நாட்டு மக்களை வஞ்சிப்பது தான் ஜனநாயகமாசிஸம் சார்" என முன்னாள் சபாநாயகர் அப்பாவு கேள்வி எழுப்பியுள்ளார்.



இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "இந்தியாவில் மத்திய அரசின் மருத்துவ நிறுவனங்களில் நீட் போன்ற தேர்வு நடைபெறுவதை எந்த மாநில அரசும் எதிர்ப்பதில்லை. அதுபோல் மாநில அரசுகளின் மாநில வரிப்பணத்தில் உருவாக்கி இருக்கும் மருத்துவ கல்லூரிகளில் மருத்துவ சேர்க்கைக்கு நீட் தேர்வு ரத்து செய்ய வேண்டும் என்பதை கருணாநிதி முதல் மு.க.ஸ்டாலின் வரை தொடர்ந்து 10 ஆண்டு காலமாக எதிர்ப்பதோடு, தமிழக சட்டமன்றத்திலும் நீட் தேவையில்லை என இரண்டு முறை ஏக மனதாக மசோதா நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பி வைத்த பெருமை முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உண்டு.

இந்த உண்மையை புரிந்து கொண்ட இந்திய இளைஞர்கள் நீட் தேர்வுக்கு எதிராக டெல்லியில் அறவழியில் போராடி வருவதையும், ஒன்றிய அரசு காட்டுமிராண்டித்தனமாக அடக்கி, ஒடுக்குவதையும் தவெக அரசு கைகட்டி வேடிக்கை பார்ப்பது ஏன் சி.எம் சார்?

தமிழ்நாட்டில், டெல்லிநீட் போராட்டத் திற்கு ஆதரவு கொடுக்கும் மாணவர்கள், இளைஞர்களை கொடூரமாக அடக்கி, ஒடுக்கி கைது செய்வது ஏன்? அவர்களை மெரினாவில் போராட அனுமதிக்காதது ஏன்? பாஜக ஆட்சிக்கு காட்டும் விசுவாசமா?

இன்று இந்திய இளைஞர்கள் ஒன்றிய அரசின் அடக்குமுறையை தாங்கி பலநாள் உணவு, உறக்கமின்றி, உயிரை பணயம் வைத்து ஜனநாயக முறையில் போராடி வருவதை தமிழ்நாட்டில் கண்டு கொள்ளாத தவெக அரசு இந்திய ஜனநாயகத்தை குழி தோண்டி புதைத்து கொண்டாடி மகிழ்வது வெட்கக்கேடானது.

'ஜனநாயகன்' பட வசூலுக்காக கர்நாடக அரசு நமக்கு தர வேண்டிய தண்ணீரை கேட்டு பெறாமலும், மேகேதாட்டுவில் அணை கட்டுவதை தடுக்க துணிவு இல்லாமலும் தமிழ்நாட்டு மக்களுக்கு தொடர்ந்து நம்பிக்கை துரோகம் செய்வதுதான் வாக்களித்த மக்களுக்கு தாங்கள் காட்டும் பிரதிபலனா?

தமிழ்நாட்டில் தவெக ஆட்சி 'பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்' என்பது போல் காங்கிரஸுக்கும் பாஜகவுக்கும் விசுவாசம் காட்டுவதற்காக, தமிழ்நாட்டு மக்களை வஞ்சிப்பது தான் ஜனநாயகமாசிஸம் சார்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


# மது விற்பனை மற்றும் பாலியல் தொழில்கள் என சமூக விரோதிகளின் கூடாரமானகோயம்பேடு பேருந்து நிலையம்

## எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு

சென்னை, ஜூலை.25-

இரவு நேரங்களில் மது விற்பனை மற்றும் பாலியல் தொழில்கள் என கோயம்பேடு பேருந்து நிலையம் சமூக விரோதிகளின் கூடாரமாக மாறி வருவதாக எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார். இதுகுறித்து அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை: சென்னை மாநகரில் பாரிஸ் கார்னரில் இயங்கி வந்த பேருந்து நிலையம் மற்றும் மொத்த காய்கறி வியாபாரத்தின் கேந்திரமாய் திகழ்ந்த கொத்தவால்சாவடி ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்ட போக்குவரத்து மற்றும் மக்கள் நெருக்கடியைப் போக்கவும், கோயம்பேட்டில் ஒரே நேரத்தில் 300 பேருந்துகள் நிறுத்தும் வசதியுடன், சராசரியாக ஒரு லட்சத்திற்கும்





மேற்பட்ட பயணிகள் பலனடையும் வகையில் சுமார் 35 ஏக்கரில் ரூ.103 கோடி மதிப்பீட்டில் ஆசியாவிலேயே மிக பிரமாண்டமான பேருந்து நிலையம் 2002ம் ஆண்டு அமைக்கப்பட்டது.

வெளி மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து வரக்கூடிய விரைவு பேருந்துகள், சென்னை மாநகருக்குள் வராமல், கோயம்பேடு பேருந்து நிலையத்திலேயே நிறுத்தப்பட்டதாலும், அங்கிருந்து சென்னை மாநகருக்குள் போதுமான அளவு மாநகர பேருந்துகள் இயக்கப்பட்டதாலும், பொதுமக்கள் பெரிதும் பலன் அடைந்தனர். மேலும், 2015ம் ஆண்டு மெட்ரோ ரயில் போக்குவரத்தும் தொடங்கப்பட்டதால் போக்குவரத்து நெரிசலும் குறைந்தது. அதேபோல், ஆம்னி பேருந்துகளை இயக்கவும் கோயம்பேட்டில் தனியாக இடவசதி செய்து தரப்பட்டது. இந்நிலையில், கோயம்பேட்டிலும் போக்குவரத்து மற்றும் மக்கள் நெரிசல் அதிகமானதை தொடர்ந்து பேருந்து பயணிகளுக்கு மேலும் வசதிகளை ஏற்படுத்தி தர, செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் பிரமாண்டமான புறநகர் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு, வெளியூர் பஸ்கள் அங்கிருந்து இயக்கப்பட்டு வருகிறது.

தற்போது, கோயம்பேடு பேருந்து வளாகம் முழுவதும் இரவு நேரங்களில் மது அருந்துதல் மற்றும் தவறான பாலியல் தொழில்களில் ஈடுபடும் சமூக விரோத செயல்கள் நடைபெறுவதாகவும் புகார்கள் எழுந்துள்ளன. சாலைகள் மோசமானதாகவும், உரிய மின் விளக்குகள் வசதியில்லாமல் கோயம்பேடு பேருந்து வளாகத்தின் உட்புறம் காணப்படுகிறது. தற்போது புதிய அரசு அமைந்த பின்னரும், கோயம்பேடு பேருந்து நிலைய வளாகத்தில் நடைபெறும் சட்டவிரோத செயல்களை கட்டுப்படுத்த காவல் துறையினர் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் உள்ளனர்.

தற்போதைய தவெக ஆட்சியில் கோயம்பேடு பேருந்து நிலைய வளாகத்தை, வெளி மாநில கட்டுமான நிறுவனத்திடம் ஒப்படைக்க முடிவு செய்திருப்பதாக தகவல்கள் வருகின்றன. அப்படி ஒரு திட்டம் இருந்தால் உடனடியாக அம்முயற்சியை கைவிட வேண்டும் என்று தவெக கூட்டணி அரசை வலியுறுத்துகிறேன். கோயம்பேடு பேருந்து நிலையத்தை போர்க்கால அடிப்படையில் புனரமைத்து, மேற்கு மற்றும் வட மாவட்டங்களுக்கு செல்லக்கூடிய பேருந்துகளையும், நகர பேருந்துகளையும் இயக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில் குறைகளை சரி செய்யாவிட்டால் கடும் நடவடிக்கை

## எச்சரித்த அமைச்சர் வன்னி அரசு

திருநெல்வேலி, ஜூலை.25-

திருநெல்வேலி புதிய பேருந்து நிலையம் அருகே ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் மாணவர்கள் விடுதியில் சமூக நலத்துறை அமைச்சர் வன்னி அரசு வியாழக்கிழமை (ஜூலை 23) இரவு திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

விடுதியில் மாணவர்களுக்கு வழங்கப் படும் உணவின் தரம், குடிநீர் வசதி, சுகாதாரம், அடிப்படை வசதிகள் உள்ளிட்டவற்றை அமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து, மாணவர்களுடன் தரையில் அமர்ந்து கலந்துரையாடிய அமைச்சர், அவர்களிடம் நேரடியாக குறைகளையும், கோரிக்கைகளையும்



கேட்டறிந்தார்.

அப்போது மாணவர்கள், விடுதியில் அசைவ உணவுகள் வழங்கப்படுவதில்லை என்றும், பெரும்பாலும் சைவ உணவுகள் மட்டுமே வழங்கப்படுவதாகவும் அமைச்சர் வன்னி அரசிடம் தெரிவித்தனர். மேலும், விடுதியில் என்னென்ன உணவுகள் வழங்கப்பட உள்ளன என்பது குறித்து முன்கூட்டியே மாணவர்களுக்கு முறையாக தகவல் தெரிவிக்கப் படுவதில்லை என்றும், வழங்கப்படும் உணவின் தரம் திருப்திகரமாக இல்லை என்றும் புகார் தெரிவித்தனர்.

குறிப்பாக, சப்பாத்தி தரமற்ற நிலையில் இருப்பதாகவும், அசைவ உணவில் ஆட்டுக்கறி உள்ளிட்ட உணவுகள் வழங்கப்படுவதில்லை என்றும் தெரிவித்தனர். உடனே சமையல் அறைக்கு சென்று உணவு ஆய்வு செய்த அமைச்சர் வன்னி அரசு, சாப்பிட்டு பார்த்தார்.

இந்த வளாகத்தில் பள்ளி மாணவர்கள், கல்லூரி இளங்கலை மாணவர்கள் மற்றும் முதுகலை மாணவர்கள் என மூன்று பிரிவுகளாக சுமார் 250 மாணவர்கள், தனித்தனியாக மூன்று விடுதிகளில் தங்கியுள்ளனர்.

விடுதி வளாகத்தில் உள்ள நூலகத்தையும் அமைச்சர் வன்னி அரசு பார்வையிட்டார். அப்போது நூலகத்தை சிலர் படுத்து உறங்குவதற்குப் பயன்படுத்துவதாக புகார் தெரிவித்ததால், அதனை அமைச்சர் கண்டித்தார். நூலகம் மாணவர்களின் கல்வி பயன்பாட்டிற்காக மட்டுமே முறையாக பயன்படுத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

மேலும், விடுதி வளாகத்தின் உள்ளே ஓடும் கழிவு நீர் ஓடை முறையாக பராமரிக்கப்படாததைக் கண்டித்த அமைச்சர் வன்னி அரசு, சாக்கடை பிரச்சினையை உடனடியாக சரிசெய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்

மாணவர்களுக்கு தரமான உணவு மற்றும் தேவையான அடிப்படை வசதிகள் முறையாக கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் குறைகளை சரி செய்யாவிட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்தார்.

மாலை தந்தி

சனிக்கிழமை 25.07.2026

# "ஜீவன் ரக்ஷா பதக் விருதுகள்" விண்ணப்பங்கள் வரவேற்பு

சிவகங்கை, ஜூலை.25-

சிவகங்கை மாவட்டத்தில் 2026 ஆம் ஆண்டிற்கான "ஜீவன் ரக்ஷா பதக் விருதுகள்" மனித உயிரைக் காப்பாற்றும் வீரசெயல்கலைப் பாராட்டுவதற்காக இந்திய உள்துறை அமைச்சகத்தால் வழங்கப்படுகின்றன. நீரில் மூழ்குதல், விபத்துகள், தீ விபத்துகள் மின்சாரம் தாக்குதல், சுரங்க மீட்புப் பணிகள் போன்ற உயிர் காக்கும் செயல்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. "ஜீவன் ரக்ஷா பதக் விருதுகள்" பிறரின் உயிரைக் காப்பாற்றிய மீட்பாளர்களுக்குக்கு சர்வோத்தம் ஜீவன் ரக்ஷா பதக், உத்தம் ஜீவன் ரக்ஷா பதக், ஜீவன் ரக்ஷா பதக் ஆகிய மூன்று விருதுகள் வழங்கப்படுகிறது. தகுதியான நபர்கள் தங்களது விண்ணப்பத்தினை உரிய படிவத்தில், இணைப்பு 1 இல் நிகழ்வு நடைபெற்ற சுய விபரத்தினை அதிகபட்சம் 250 சொற்களிலும் , இணைப்பு 2 இல் தகுதியான நபர்களின் குணநலன் மற்றும் பின்னணி சரிபார்ப்பு சான்றிதழ் உரிய அதிகாரியின் கையொப்பம் மற்றும் முத்திரையுடன் 31.07.2026க்குள் விண்ணப்பிக்கலாம். முக்கிய குறிப்பாக, 01.10.2024க்கு முன்பு நடைபெற்ற உயிர் காப்பாற்றும் செயல்களுக்கான பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்படாது. அதன்படி, 31.07.2026க்குள் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள, மாவட்ட சமூக நல அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம். மேலும், இதுதொடர்பான விபரங்களுக்கு மேற்குறிப்பிட்டுள்ள மாவட்ட சமூக நல அலுவலகத்தினை நேரில் தொடர்பு தொடர்பு கொள்ளலாம் எனவும் மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ், தெரிவித்துள்ளார்...

# குன்னூர் ஊராட்சி ஒன்றியம், உபதலை ஊராட்சிப் பகுதியில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு





நீலகிரி, ஜூலை.25-

நீலகிரி மாவட்டம், குன்னூர் ஊராட்சி ஒன்றியம், உபதலை ஊராட்சி பகுதியில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்நீலகிரி மாவட்டத்தில் உள்ள நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராம ஊராட்சிப்பகுதிகளில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் மேற்கொள்ள ப்பட்டு வருகின்றன. அந்தவகையில், மாவட்ட ஆட்சித்தலைவர் குன்னூர் ஊராட்சி ஒன்றியம், உபதலை ஊராட்சி மன்ற அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள் மற்றும் பொதுமக்களுக்கு செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார். அதனை தொடர்ந்து உபதலை ஊராட்சி நியாயவிலைக்கடையில் பதிவேடுகள், பொருட்களின் இருப்பு மற்றும் தரம் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும், உபதலை ஊராட்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ஆய்வு மேற்கொண்டு அங்கு பராமரிக்கப்படும் பதிவேடுகள், வங்கியின் செயல்பாடுகள் குறித்தும், பயிர் கடன் தொடர்பாகவும் அலுவலர்களிடம் கேட்டறிந்தார். அதனை தொடர்ந்து, உபதலை ஊராட்சி அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளின் வருகை, எடை, உயரம் மற்றும் உணவு பொருட்களின் இருப்பு அறையினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும், உபதலை ஊராட்சி தொடக்கப்பள்ளியில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பள்ளி மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடி மாணவ, மாணவியர்களுக்கு அளிக்கபடும் கற்றல் திறன் குறித்து ஆசிரியர்களிடம் கேட்டறிந்தார். ஆசிரியர்களிடம் கேட்டறிந்ததுடன் பள்ளி விளையாட்டு மைதானத்தில் மாணவிகள் ஹாக்கி விளையாட்டு பயிற்சியில் ஈடுபட்டதை பார்வையிட்டார்.பின்னர் உபதலை ஊராட்சி துணை சுகாதார நிலையத்தினை நேரில் ஆய்வு மேற்கொண்டு நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் மற்றும் மருந்துகளின் இருப்பு குறித்து கேட்டறிந்தார். மேலும், உபதலை ஊராட்சி பகுதியிலுள்ள இசேவை மையத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு மைய செயல்பாடுகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதனை தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், உபதலை ஊராட்சி பகுதியில் உள்ள வளங்கல் மீட்பு மையத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, தூய்மைப்பணியாளர்கள் மூலமாக வீடுகள் தோறும் பொதுமக்களிடமிருந்து மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து முறையாக பெற வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.மேலும், உபதலை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.9.50 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள இருப்பு அறையுடன் கூடிய சமையற் கூடத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் உபதலை ஊராட்சிக்குட்பட்ட அம்பிகாபுரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கால்வாய் தூர்வாரும் பணியினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.இதனை தொடர்ந்து, உதகை சாலை குன்னூர் பகுதியில் செயல்படும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி மற்றும் குன்னூர் பிருந்தாவன் சாலை பகுதியில் தனித்தனியே செயல்படும் மாணவர் மற்றும் மாணவியர்களுக்கான சமூக நீதி விடுதிகள் ஆகியவற்றையும் நேரில் பார்வையிட்டு மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடி, உணவு பொருட்களின் இருப்பு குறித்தும் ஆய்வு மேற்கொண்டு, மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் உணவுகள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார். இந்த ஆய்வின் போது, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ராமசாமி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பஷீர்அகமது, குன்னூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுப்ரமணி, விமலா, குன்னூர் வட்டாட்சியர் செந்தில்குமார், குன்னூர் நகராட்சி ஆணையாளர் கிருஷ்ணாராவ் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



# நடிகர் சூர்யாவின் 51'ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அவரது ரசிகர்கள் தாராபுரம் மற்றும் காங்கேயம் சுற்றுவட்டாரத்தில் "போதைப்பொருள் தடுப்பு" துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கினர்

திருப்பூர், ஜூலை.25-

நடிகர் சூர்யா அவர்களின் 51'ஆவது பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞரணி சூர்யா நற்பணி இயக்கம் மற்றும் தாராபுரம்-காங்கேயம் ஒன்றிய இளைஞரணி சூர்யா நற்பணி இயக்கம் சார்பாக மாவட்ட இளைஞரணி தலைவர் அகிலன், செயலாளர் குகன் மற்றும் தாராபுரம் ஒன்றிய இளைஞரணி தலைவர் தன்வின், செயலாளர் சரவணன், பொருளாளர் விமல், மற்றும் காங்கேயம் ஒன்றிய இளைஞரணி தலைவர் சிவபாலாஜி, செயலாளர் அஸ்வின் , பொருளாளர் சிவசந்தோஷ் மற்றும் அனைத்து உறுப்பினர்களும் காங் கேயம் மற்றும் தாராபுரம் சுற்றுவட்டாரத்தில் போதைப்பொருள் தடுப்பு துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கினர்

# உதகை தெற்கு (மேற்கு) ஒன்றியம் கீழ்குந்தா பேரூர் கழக தி.மு.க செயல்வீரர்கள் கூட்டம்





நீலகிரி, ஜூலை.25-

நீலகிரி மாவட்டம், உதகை தெற்கு (மேற்கு) ஒன்றியம் மற்றும் கீழ்குந்தா பேரூர் கழக தி.மு.க செயல்வீரர்கள் கூட்டம் ஒட்டிமொரா ஒசட்டி கூட்ட அரங்கில் மாவட்ட கழக பொறுப்பாளர் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம். ராஜூ தலைமையில் நடைபெற்றது. ஒன்றிய கழக செயலாளர் ஜெகதீசன் அவர்கள் வரவேற்று பேசினார், மாவட்ட அவைத் தலைவர் போஜன், பொதுக்குழு உறுப்பினர்கள் பில்லன், மகேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கூட்டத்தில், உதகை தெற்கு (மேற்கு) ஒன்றியத்திற்கு உட்பட்ட கிளை கழகங்களிலும் தொடர்ந்து கழக நிகழ்ச்சிகள் நடத்துவது எனவும்,

உள்ளாட்சி தேர்தலில் நூறு சதவீதம் வெற்றி பெற அயராது உழைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.கூட்டத்தில், ஒன்றிய கழக நிர்வாகிகள் சிவசுப்ரமணியம், ஈஸ்வரன், ராஜூ, கீழ்குந்தா பேரூர் கழக நிர்வாகிகள் மாடாக்கண்ணு, சிவகுமார், மணி, மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் சண்முகம், சங்கர், ஈஸ்வரன், முன்னாள் தலைவர்கள் பந்தையன், குப்புசாமி, சரவணன் உட்பட அணிகளின் நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் திரளாக கலந்துகொண்டனர். கூட்டம் முடிவில் கீழ்குந்தா பேரூர் செயலாளர் சதீஷ்குமார் நன்றி கூறினார்.



# செங்குன்றத்தில் பொதுமக்களுக்கு இனிப்புடன் பிரியாணி வழங்கல்

மாதவரம், ஜூலை.25-

தமிழ்நாடு முதல்வர் ச.ஜோசப் விஜய் நடித்த ஜனநாயகன் திரைப்படம் உலகம் முழுவதும் வெளியானது. செங்குன்றம் நகர தவெக சார்பில் மாதவரம் தொகுதி செங்குன்றம் நாரவாரிக்குப்பம் பேரூராட்சிக்குட்பட்ட 8வது வார்டு சைதானிபீபீ தர்கா அருகே நகர செயலாளர் கே.விஜி தலைமையில் 500 பேருக்கு அறுசுவை சிக்கன் பிரியாணி மற்றும் இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

செங்குன்றம் நகர தவெக இணைச் செயலாளர் வினோத், துணைச் செயலாளர்கள் மணிகண்டன், காதர், பொருளாளர் சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தமிழக வெற்றிக் கழகம் திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட கழகச் செயலாளருமான எம்.எல். விஜய்பிரபு கலந்து கொண்டு பொதுமக்களுக்கு அறுசுவை சிக்கன் பிரியாணி மற்றும் இனிப்புகளை வழங்கினார். இதில் மாவட்டப் பொருளாளர் மனோஜ், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஷாலினிமகேஷ், புழல் ஒன்றிய செயலாளர் மைக்கேல் உள்ளிட்ட செங்குன்றம் பேரூர் கழக தவெக நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.







# ஸ்ரீ பஞ்சசக்தி அமிர்தவர்ஷினி அம்மன் ஆலயத்தில் பால்குடம் எடுத்தல் நிகாழ்ச்சி

மாதவரம், ஜூலை.25-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் நல்லூர் ஊராட்சி ஆட்டந்தாங்கல் கிராமம் ராஜீவ் காந்தி நகரில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ பஞ்சசக்தி அமிர்தவர்ஷினி அம்மன் ஆலயத்தில் 27ம் ஆண்டு ஆடிமாத திருவிழாவை முன்னிட்டு பால்குடம் எடுத்தல் மற்றும் பதிவிளக்கு பூஜை நிகழ்ச்சி ஆலய ஸ்தாபகர் சரவணன் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் ஆலமரம் அருள்மிகு ஸ்ரீ முனீஸ்வரர் ஆலயத்திலிருந்து மேளதாளத்துடன் பெண்கள் தங்களது சிறசியில் பால்குடம் எடுத்துவந்து அம்மனுக்கு பால் அபிஷேகம் செய்து பின்னர் அம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதில் சுற்றுவட்டார பக்தர்கள் ,சிவனடியார்கள், அறக்கட்டளை நிர்வாகிகள் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.

# ஊத்துக்கோட்டை அருகே பூந்தோட்டத்தில் 100ஆண்டு பழமை வாய்ந்த ஸ்ரீ அங்காளம்மன் திருக்கோவில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்



திருவள்ளூர், ஜூலை.25-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை பூந்தோட்டம் பகுதியில் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஸ்ரீ அங்காளம்மன் திருக்கோவில் அ மைந்துள்ளது. இக்கே ாவிலில் புனரமைப்பு பணிகள் நிறவடைந்ததை தொடர்ந்து அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் வெகு விமர்சியாகநடைபெற்றது. நிகழ்ச்சியை முன்னிட்டு கடந்த 23ஆம் தேதி முற்கால யாக பூஜை,கணபதி ஹோமத்துடன் கும்பாபிஷேக விழா தொடங்கியது. தொடர்ந்து யாகசாலை பூஜை,கலசபூஜை,கோ பூஜை, பூர்ணாஹுதி உள்ளிட்ட சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. விழாவின் முக்கிய நாளான இன்று சிவாச்சாரியார்கள் வேதமந்திரங்கள் முழங்க பல்வேறு புண்ணிய நதிகளில் இருந்து கொண்டுவரப்பட்ட புனித நீர் கைலாய வாத்தியங்களுடன் கோவிலை சுற்றி வளம் வந்து ராஜகோபுரத்தின் மீதும், மற்றும் அங்காளம்மன் மீதும் புனித நீர் ஊற்றி அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழாவை வெகு சிறப்பாக நடத்தி வைத்தனர்.பின்னர் அங்கு கூடியிருந்த பெருந்திரளான பக்தர்கள் மீது புனித நீர் தெளிக்கப்பட்டது. அப்போது ஓம் சக்தி! பராசக்தி! பக்தர்கள் கோஷங்கள் எழுப்பி அம்மனை வழிபட்டனர். இந்நிகழ்ச்சியில் சுற்றுவட்டார பகுதியில் இருந்து 500க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.பின்னர் கோவில் நிர்வாகம் சார்பில் பக்தர்களுக்கு அன்னதான பிரசாதம் வழங்கப்பட்டது. இதனை அடுத்து வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள ஸ்ரீ அங்காளம்மனுக்கு மகா தீபா அவர்களை காண்பிக்கப்பட்டது.



# செங்குன்றத்தில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கல்

மாதவரம், ஜூலை.25-

மாதவரம் தொகுதி செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சி ராஜாஜி தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ நாகவள்ளி முத்துமாரியம்மன் ஆலயத்தில் 34ம் ஆண்டு ஆடிமாத திருவிழாவை முன்னிட்டு ஜானகி நெல் மண்டி உரிமையாளர் கே.ஜானகிராமன் நாயுடு மற்றும் தொழிலதிபர் ஜா.செல்வகுமார் ஆகியோர் குடும்பத்தினர்கள் சார்பில் பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.நிகழ்ச்சியில் அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் செய்து மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் ஆலய நிர்வாகிகள் மற்றும் கிராமபொதுமக்கள் முன்னிலையில் உபயதாரர்கள் பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறுசுவை அன்னதானத்தை வழங்கினர்.

# மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத்திட்டம் (அட்மா)கிசான் கோஸ்திஷ் விவசாயிகள் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி

சிவகங்கை, ஜூலை.25-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் வட்டாரத்தில் வேளாண்மைத்துறை கீழ் இயங்கிவரும் (அட்மா), மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் மூலம் கிசான் கோஸ்திஷ் விவசாயிகள் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி சிலையாவூரணி கிராமத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிலையாவூரணி அனைவரும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் விவசாய பெருமக்கள் வேளாண் சார்ந்த தொழில்நுட்பங்கள் குறித்த விளம்பர பதாகைகள் ஏந்தி பேரணி நடத்தினார்கள். விவசாய பெருமக்கள்

இக்கூட்டத்திற்கு சிவகங்கை மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர்) கமிலஸ்.சி.லீமாரோஸ் அவர்கள் தலைமை வகித்து கலந்து கொண்டு விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை திட்டங்கள், பிரதம மந்திரி கௌரவ நிதி உதவி (PM KISAN ) பெற விண்ணபிக்க வேண்டி ஆவணங்கள் தகுதிகள் மத்திய, மாநில அரசு திட்டங்கள், இயற்கை விவசாயம், மண்வள மேலாண்மை, ஒருங்கிணைந்த ஊட்டசத்து மேலாண்மை, காலநிலைகேற்ற விவசாய தொழில்நுட்பங்கள், குறைந்த செலவில் அதிக வருமானம் பெறுவதற்க்கான தொழில்நுட்பங்கள் மற்றும் அனைத்து பயிர்களுக்கும் உற்பத்தி திறன் மேம்பாட்டு காரணிகள் பற்றியும் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

காளையார்கோவில் வேளாண்மை உதவி இயக்குநர்(பொ) ப. தைப்பத்துல் ஆசிபா அவர்கள் வேளாண்மைத்துறையில் செயல்படுத்தி கொண்டிருக்கும் திட்டங்கள் பற்றியும் திட்டங்களின் பயன்பாடுகள்,வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் வேளாண்மைத்துறையின் மூலம் விநியோகிக்கப்படும் இடுபொருட்கள் (அசோஸ்பைரில்லம் , பாஸ்போபாக்டிரியா, திரவ பொட்டாஷ்) பயன்படுத்தி அனைத்து பயிர்களுக்கும் விதை நேர்த்தி செய்வதன் மூலம் ஏற்படக்கூடிய பயன்பாடுகள் குறித்த திட்டங்களை பற்றி விரிவாக விவசாயிகளுக்கு எடுத்து கூறினார்.

இப்பயிற்சியில் மதுரை ஆர்.என்.ஆர்(அக்ரி டெவலப்பர்) முனைவர் ந..ராஜேஸ் அவர்கள் இரசாயனஉரங்கள் பயன்பாட்டினை





குறைத்தல் குறித்த தொழில்நுட்பங்களான அனைத்து பயிர்களுக்கும் ஒருங்கிணைந்த முறையில் சமச்சீர் உரமிடல், இயற்கையான முறையில் பயிர்களுக்கு எவ்வாறு உரமிடுதல், பசுந்தாள் உரங்கள் விதை முதல் அறுவடை வரை உள்ள தொழில்நுட்பங்கள் மற்றும் பசுந்தழை உரங்கள் வயலில் இடுவதால் இயற்கையான முறையில் பயிர் சாகுபடி செய்வது, இலை வண்ண அட்டையை பயன்படுத்தி உரம் இடுவது உயிர் உரங்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள், கரிம உரங்கள் , மண்புழு உரங்கள் தயாரிக்கும் முறைகள் பூசா கேப்சூல் வேஸ்ட் டீ கம்போஸ்ட் தயாரிக்கும் முறைகள் மற்றும் பயன்பாடுகள் பற்றியும் பேரூட்ட சத்துகள் மற்றும் நுண்ணூட்ட சத்துகள் இயற்கையான முறையில் இடுவதை பற்றியும் எடுத்து கூறினார்.

துணை தோட்டக்கலை அலுவலர் முத்துக்குமார் அவர்கள் தேசிய தோட்டக்கலை இயக்கத்தில் காய்கறி நாற்றுகள் பழக்கன்றுகள் பண்ணைக்குட்டை அமைத்தல் மற்றும் காய்கறி விதைகள் விநியோகித்தல் போன்ற திட்டங்கள் விவசாயிகளுக்கு வழங்கபடுகிறது என்றும், பிரதம மந்திரி நுண்ணுயிர் பாசன திட்டத்தில் சொட்டுநீர் பாசனம் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் நிரந்தர பந்தல் அமைத்தல் போன்ற திட்டங்களை எடுத்து கூறினார்.

வேளாண்மை பொறியியல் துறையில் உதவி செயற்பொறியாளர் சார்க்கின் விமலா அவர்கள் வேளாண்மை பொறியியல் துறையில் உள்ள திட்டங்களான இ வாடகை செயலி பயன்படுத்தி விலையில் வாடகைக்கு பெற்று கொள்ளும் வழிமுறைகள் மற்றும் இதர திட்டங்களை எடுத்து கூறினார்.

கால்நடை துறையில் கால்நடை உதவி மருத்துவர் அசோக் அவர்கள் கால்நடை துறையில் உள்ள திட்டங்களான தேசிய கால்நடை பாதுகாப்பு திட்டத்தில் கோமாரி, காணை நோய் தடுப்பு ஊசி ஆறு மாதத்திற்கு ஒருமுறையும் ஒரு வருடத்திற்கு 2 முறையும் செலுத்த வேண்டும் என்றும், வெறிநோய் தடுப்புஊசி திட்டத்தில் இலவச தடுப்பு ஊசி செலுத்தி கொள்ளலாம் என்றும், தேசிய கால்நடை இயக்கத்தில் கால்நடைகளை காப்பீடு( insurance) செய்தல் மற்றும் தேசிய மின்னணு கால்நடை இயக்கம் திட்டத்தின் கீழ் ஆடு,மாடு, கோழி வைத்திருப்பவர்கள் தங்களது ஆதார் மற்றும் தொலைபேசி எண்களை என்றும் எடுத்து கூறினார். செய்து கொள்ளலாம் கால்நடை துறையில் பதிவு

காளையார் கோவில் துணை வேளாண்மை அலுவலர் செந்தில் அவர்கள் மண் ஆய்வுக்கு மண் மாதிரி சேகரிக்கும் முறைகள், மண் ஆய்வு செய்வதன் முக்கியத்துவங்கள் மண் மாதிரி எடுக்க கூடாத இடங்கள் மற்றும் மண் ஆய்வு செய்வதற்கு அனுப்ப வேண்டிய விபரங்கள் குறித்து எடுத்து கூறினார். மண் வள அட்டை பயன்படுத்தி பயிர்களுக்கு உரமிடுமாறு என்பதனை எடுத்துக்கூறினார்.

அட்மாதிட்டத்தின் காளையார்கோவில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஜோதி அவர்கள் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களான உள் மற்றும் வெளிமாநில, மாவட்ட அளவிலான விவசாய பயிற்சி,கண்டுணர்வு சுற்றுலா மற்றும் செயல் விளக்கத்திடல்கள் குறித்து விவசாயிகளுக்கு விரிவானமுறையில் எடுத்துக்கூறினார். நிலங்களில் கோடை உழவு செய்வதால் ஏற்படும் நன்மைகள் மற்றும் உயிரி உரங்களான திரவ அசோஸ்பைரில்லம், திரவ ரைசோபியம்(பயறு) திரவ பாஸ்போபாக்டிரியா உபயோகிக்கும் முறைகள் ( விதை நேர்த்தி, நாற்று நனைத்தல், நேரடி வயலில் இடுதல், நீர்வழி உரமிடதல்) பற்றியும் விவசாயிகளுக்கு செயல்விளக்கம் மூலம் எடுத்து கூறினார்.

மேலும் இக்கூட்டத்தில் உதவி வேளாண்மை அலுவலர் பழனியாண்டி அவர்கள் நெல் பயிரில் வறட்சி காலங்களில் விதை முளைப்பு திறனை அதிகரிக்க (1 சதவீதம் பொட்டாசியம் குளோரைடு) பயன்படுத்தி விதை கடினமாக்குதல் செயல்விளக்கம் விவசாயிகளுக்கு செய்து காண்பித்தார். தொழில்நுட்பமேலாளர் காளீஸ்வரி அவர்கள் பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்தார்.

## லட்சிய ஜனநாயகக் கட்சியின் மாநில இளைஞரணி துணைச் செயலாளராக முடிச்சூரைச் சேர்ந்த வழக்கறிஞர் அருண் நியமனம்

தாம்பரம், ஜூலை.25-

லட்சிய ஜனநாயகக் கட்சியின் மாநில இளைஞரணி துணைச் செயலாளராக முடிச்சூர் பகுதியைச் சேர்ந்த வழக்கறிஞர் அருண் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். இப்பொறுப்பிற்கான நியமன ஆணையை புதுச்சேரி காமராஜர் நகர் எம்எல்ஏ மற்றும் லட்சிய ஜனநாயகக் கட்சியின் நிறுவனத் தலைவர் சார்லஸ் மார்ட்டின் மற்றும் மாநில பொதுச் செயலாளர் நெல்லை ஜீவா ஆகியோர் நேரில் வழங்கி, புதிய பொறுப்பில் சிறப்பாக செயல்பட்டு கட்சியின் வளர்ச்சிக்கும், இளைஞர்களின் முன்னேற்றத்திற்கும் பாடுபட வேண்டும் என்று வாழ்த்தி அறிவுறுத்தினார்.



புதிய பொறுப்பைப் பெற்ற வழக்கறிஞர் அருண் அவர்கள், கட்சித் தலைமையின் நம்பிக்கைக்கு நன்றி தெரிவித்து, தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பை முழு அர்ப்பணிப்புடன் நிறைவேற்றி, கட்சியின் வளர்ச்சிக்காக தொடர்ந்து பணியாற்றுவதாக உறுதியளித்தார்.இந்நிகழ்வில் கட்சியின் மாநில, மாவட்ட மற்றும் உள்ளூர் நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு அருண் அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.



■ உங்களைத் தேடி, உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், ஆம்பூர் பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில், நடைபெற்ற அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டத்தில், பல்வேறு துறைகளின் சார்பில், 209 பயனாளிகளுக்கு ரூ.47 இலட்சத்து 91 ஆயிரத்து 400/ மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார், இ.ஆ.ப., ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன் முன்னிலையில் (23.07.2026) அன்று வழங்கினார்கள். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அசூஷ் அனில் வாகரே,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாராயணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சௌ.தமிழரசி மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்




■ சிவகங்கை மாவட்டம் சாலை கிராமம் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட கொலை முயற்சி குற்றவழக்கில் தொடர்புடைய அருண்(29) மற்றும் அதிவீரராஜதுரை (21) ஆகியோரை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா. சிவ பிரசாத், பரிந்துரையின் பேரில், சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ், குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் இருவரையும் கைது செய்ய உத்தரவிட்டார். அதன்படி, இருவரும் குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

## அரசு ஊழியர்கள், ஓய்வூதியதாரர்கள் கவனத்திற்கு: மருத்துவச் செலவுத் தொகை மீள்பெற விண்ணப்பங்கள் ஜூலை 30க்குள் சமர்ப்பிக்க வேண்டும்

கிருஷ்ணகிரி, ஜூலை.25-

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் (2021ஞ்2022) 30.06.2026 ஆம் தேதியுடன் நிறைவடைந்துள்ளது. இதையடுத்து, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பணிபுரியும் அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் தங்களது மருத்துவச் சிகிச்சைக்கான செலவுத் தொகையை மீளப் பெறுவதற்கான விண்ணப்பங்களை



மாவட்ட அளவிலான அதிகாரம் பெற்ற குழுவின் பரிந்துரைக்காக 30.07. 2026க்குள் சமர்ப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்கள் தேவையான அனைத்து ஆவணங்களையும் இணைத்து, சம்பந்தப்பட்ட ஊதியம் வழங்கும் அலுவலர் மூலம் கிருஷ்ணகிரி மாவட்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் (நலப்பணிகள்) அலுவலகத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்அனைத்து தகுதியுடைய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களும் காலதாமதமின்றி விண்ணப்பங்களை சமர்ப்பித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், தெரிவித்துள்ளார்.



## கிருஷ்ணகிரி வந்தஜெகநாத யாத்திரை தேருக்கு உற்சாக வரவேற்பு

கிருஷ்ணகிரி, ஜூலை.25-

கிருஷ்ணகிரி வந்த ஜெகநாத யாத்திரை தேருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.ஒடிசா மாநிலம் பூரியில் உள்ள ஜெகந்நாதர் கோயிலில் ஆண்டுதோறும் ரத யாத்திரை திருவிழா நடப்பது வழக்கம். இதன் நோக்கம், பக்தர்களை தேடி வரும் கடவுள் என்பதாகும். ஒன்பது நாள் திருவிழாவில், கிருஷ்ணர், பலராமர், சுபத்ரா மூவரும் விருந்தாவனத்தில் இருந்து மதுராவுக்கு ரதத்தில் போனதை நினைவுபடுத்தும் விழாவாகும். ஜெகந்நாதர், கிருஷ்ணரின் ஒரு அவதாரம். சமத்துவத்தின் அடையாள ரத யாத்திரையின் போது, ஜாதி, மதம், உயர்வு, தாழ்வு எதுவும் இன்றி, அரசர் முதல் ஆண்டி வரை சாலையில் இறங்கி ரதத்தை இழுப்பது வழக்கம். இந்த ரதத்தை இழுப்பது மிகப்பெரிய புண்ணியம் என்று நம்பப்படுகிறது.அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், அகில உலக இஸ்கான் அமைப்பு சார்பில் கடந்த 15ம் தேதி ஓசூரில் துவங்கிய, ஜெகந்நாதர் ரத யாத்திரை, மாலூர், கெலமங்கலம், தேன்கனிக்கோட்டை, கர்நாடகா மாநிலம் முல்பாகல், தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு ஆகிய பகுதிகளுக்கு சென்று நேற்று முன்தினம் கிருஷ்ணகிரி புதிய பஸ் ஸ்டாண்ட் அருகில் வந்தது. அங்கு சிறப்பு பூஜை செய்து, இஸ்கான் மாவட்ட தலைவர் சீனிவாசா ஸ்யாம் பிரபு தலைமையில், ஏராளமான பக்தர்கள் தேரின் வடம் பிடித்து இழுத்துச் சென்றனர். நகரின் முக்கிய பகுதிகளுக்கு சென்று கிருஷ்ணகிரி மீனாட்சி மஹால் அருகே ரத யாத்திரை நிறைவடைந்தது. நேற்று கிருஷ்ணகிரியில் இருந்து புறப்பட்ட ரதம், இன்று (24ம் தேதி) தர்மபுரி சென்று நாளை அரூரில் நிறைவடைகிறது. இதற்கான ஏற்பாடுகளை கிருஷ்ணகிரி இஸ்கான் கிளை மேலாளர் சுயம் நித்தாய் செய்திருந்தார்.



## நடிகர் சூர்யா பிறந்தநாளை முன்னிட்டு கிருஷ்ணகிரியில் மாபெரும் ரத்ததான முகாம்

கிருஷ்ணகிரி, ஜூலை.25-

நடிகர் சூர்யாவின் 51வது பிறந்தநாளை முன்னிட்டு, கிருஷ்ணகிரியில் இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி, ரோட்டரி கிளப் மற்றும் சூர்யா ரசிகர் மன்றம் இணைந்து மாபெரும் ரத்ததான முகாமை நடத்தினர்.முகாமிற்கு இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி மாவட்ட செயலாளர் செந்தில் குமார் தலைமை வகித்தார். மாவட்ட சேர்மன் செபஸ்டின், வெங்கட்ராமன் மற்றும் ரோட்டரி சங்கத் தலைவர் விஸ்வநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நடிகர் சூர்யாவின் பிறந்தநாளை முன்னிட்டு, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட ரசிகர் மன்றத்தின் சார்பில் மாவட்ட பொறுப்பாளர்கள் திருமால் ராஜதுரை, குழலரசன் மற்றும் ஊத்தங்கரை ஒன்றிய தலைவர் சுதாகர் ஆகியோரின் தலைமையில் ரத்ததானம் நடைபெற்றது.இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய, நகர நிர்வாகிகளான சந்தோஷ், அஜய், தர்மேந்திரன், தீபக், தர்மதுரை, அன்புதுரை, சூர்யா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும், ஏராளமான ரசிகர் மன்ற நிர்வாகிகள் மற்றும் இளைஞர்கள் தன்னார்வத்துடன் ரத்ததானம் செய்து சமூகப் பொறுப்புணர்வை வெளிப்படுத்தினர். முகாமைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. ரத்ததானம் செய்த அனைத்து தன்னார்வலர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## சிப்காட் பகுதியில் 22.100 கிலோ கஞ்சா பறிமுதல்ஒருவரிடம் போலீசார் விசாரணை

மானாமதுரை, ஜூலை.25-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சிப்காட் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில், காவல் ஆய்வாளர் மற்றும் சார்பு ஆய்வாளர் தலைமையிலான போலீசார் மேற்கொண்ட தீவிர சோதனையில், தடை செய்யப்பட்ட 22.100 கிலோ கிராம் கஞ்சா போதைப்




பொருள் பறிமுதல் செய்யப்பட்டது.சோதனையின்போது, சிப்காட் பகுதியைச் சேர்ந்த வசந்த்சரண் என்பவர் வைத்திருந்த 22.100 கிலோ கஞ்சாவை போலீசார் கைப்பற்றி, அதுதொடர்பாக வழக்குப்பதிவு செய்தனர்.இந்த சம்பவம் குறித்து போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், கஞ்சா எங்கிருந்து கடத்தி வரப்பட்டது, யாருக்கு விற்பனை செய்ய திட்டமிடப்பட்டது என்பது குறித்தும் விசாரணை நடைபெற்று வருகிறது.

# திருப்பூர் மாநகராட்சியின் மெத்தனத்தால் மக்கள் அவதிபள்ளி மாணவர்கள், வியாபாரிகள் கடும் சிரமம்

திருப்பூர், ஜூலை.25-

திருப்பூர் மாநகராட்சி மண்டலம்1, குமார் நகர் அருகே அவிநாசி பிரதான சாலையில் குடிநீர் குழாய் பதிக்கும் பணிக்காக தோண்டப்பட்ட பள்ளம் பல மாதங்களாக மூடப்படாமல் கிடப்பதால் பொதுமக்கள், பள்ளி மாணவர்கள் மற்றும் வணிகர்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். பணிகள் முழுமையாக நிறைவுபெறாததால், அருகில் செயல்பட்டு வரும் பிஷப் உபகாரசாமி பள்ளி மாணவர்கள் பள்ளிக்குச் சென்று வர மாற்றுப் பாதையை பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் தினமும் பெரும் அவதியடைந்து வருகின்றனர்.மேலும், அந்தப் பகுதியில் மாவட்ட காவல்துறை ஆணையாளர் அலுவலகம் மற்றும் வணிக வளாகங்கள் அமைந்துள்ளன. வணிக வளாகங்களில் தொழில் செய்து வரும் வியாபாரிகள், மாநகராட்சியின் மெத்தனமான



பணிகளால் தங்களது வியாபாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக வேதனை தெரிவித்துள்ளனர்.இதுகுறித்து பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பலமுறை அதிகாரிகளிடம் முறையிட்டும் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என குற்றம்சாட்டப்படுகிறது.

இந்நிலையில், அப்பகுதியை ஆய்வு செய்த வடக்கு போக்குவரத்து காவல் நிலைய ஆய்வாளர், சாலைப் பணியில் ஈடுபட்டிருந்த அதிகாரிகளிடம், இது முக்கிய போக்குவரத்து சாலை என்பதால் விபத்துகள் ஏற்படாமல் இருக்க பணிகளை உடனடியாக விரைந்து முடிக்க வேண்டும் என அறிவுறுத்தியதாக கூறப்படுகிறது.எனவே, பொதுமக்களின் நலன் கருதி திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் உடனடியாக தலையிட்டு, சாலைப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# போதிய பஸ் வசதி இல்லாததால் படிகளில் தொங்கி பயணிக்கும் மாணவர்கள் - மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா?

மானாமதுரை, ஜூலை.25-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையிலிருந்து சிவகங்கைக்கு போதிய அரசு மற்றும் தனியார் பேருந்துகள் இயக்கப்படாததால், மாணவர்கள் மற்றும் பயணிகள் படிக்கட்டுகளில் தொங்கியபடி ஆபத்தான முறையில் பயணம் செய்யும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. மானாமதுரை மற்றும் அதனைச் சுற்றியுள்ள ராஜகம்பீரம், இடைக்காட்டூர், கல்குறிச்சி, முத்தனேந்தல், மேலநெட்டூர், கீழநெட்டூர், சின்னக்கண்ணனூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் அரசு/தனியார் ஊழியர்கள் தினமும் சிவகங்கைக்கு





செல்ல மானாமதுரை பேருந்து நிலையத்திற்கு வருகின்றனர்.கடுமையான கூட்ட நெரிசல்குறிப்பாக காலை 7:00 மணி முதல் 9:30 மணி வரையிலும், மாலை 4:30 மணி முதல் இரவு 7:30 மணி வரையிலும் இயக்கப்படும் அரசு மற்றும் தனியார் பேருந்துகளில் கடுமையான கூட்ட நெரிசல் காணப்படுகிறது. ஒரு பேருந்தை தவறவிட்டால் அடுத்த பேருந்துக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய சூழல் உள்ளதால், காலதாமதத்தைத் தவிர்க்க மாணவர்கள் படிக்கட்டுகளில் தொங்கியபடி ஆபத்தான பயணத்தை மேற்கொள்கின்றனர்.பெற்றோர்கள் அச்சம்அரசுப் பேருந்துகள் மட்டுமின்றி, தனியார் பேருந்துகளிலும் இதேபோல் மாணவர்கள் கூட்ட நெரிசலில் தொங்கியபடி பயணிப்பது வாடிக்கையாகிவிட்டது. பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகள் கூட பாதுகாப்பற்ற முறையில் படிகளில் தொங்கியபடி பயணிப்பது பெற்றோர்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. பொதுமக்கள் கோரிக்கை

மானாமதுரை சிவகங்கை வழித்தடத்தில் பயணிகளின் எண்ணிக்கை பல மடங்கு உயர்ந்துள்ள நிலையிலும், அதற்கு ஏற்ப கூடுதல் பேருந்துகள் இயக்கப்படவில்லை என பயணிகள் நல அமைப்பினர் வேதனை தெரிவிக்கின்றனர். ஏதேனும் அசம்பாவிதம் அல்லது விபத்து நடக்கும் முன், மாவட்ட நிர்வாகமும் போக்குவரத்துத் துறையும் தலையிட்டு கூடுதல் அரசு மற்றும் தனியார் பேருந்துகளை இயக்க உடனடி நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

# ஊடகவியலாளர்களை அவமதித்ததாக திருப்புவனம் காவல் ஆய்வாளர் மீது நடவடிக்கை கோரி கண்டனம்சிவகங்கை மாவட்ட பத்திரிகையாளர்கள் நல சங்கம் வலியுறுத்தல்

சிவகங்கை, ஜூலை .25-

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் பேரூராட்சிக் குட்பட்ட வாரச் சந்தை ஏல நிகழ்வில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களை உள்ளே அனுமதிக்காமல், அவர்களிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டதாகக் கூறப்படும் திருப்புவனம் காவல் ஆய்வாளர் சேதுமணி மாதவன் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிவகங்கை மாவட்ட பத்திரிகையாளர்கள் நல


SIVAGANGAI DISTRICT JOURNALIST WELFARE ASSOCIATION

சிவகங்கை மாவட்ட பத்திரிக்கையாளர்கள் நல சங்கம்

சிவகங்கை மாவட்ட பத்திரிக்கையாளர்கள் நல சங்கத்தின் அதிகாரப்பூர்வ கண்டன அறிக்கை

[illegible]

சிவகங்கை மாவட்ட பத்திரிக்கையாளர்கள் நல சங்கம்
(நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்)

இடம்.சிவகங்கை
நாள். 24.07.2026

No.6A, Madurai Road, Sivagangai - 630 561

ஒன்று படுவோம்..! வென்று விடுவோம்...!!

சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து சங்கம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் கூறியிருப்பதாவது:பொதுநலன் சார்ந்த அரசு நிகழ்வுகள் மற்றும் மக்கள் நலன் தொடர்பான தகவல்களை சேகரிக்கும் பணியில் ஈடுபடும் ஊடகவியலாளர்களுக்கு உரிய பாதுகாப்பு, மரியாதை மற்றும் ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும் என்பது ஜனநாயகத்தின் அடிப்படை நெறியாகும். ஆனால், திருப்புவனம் வாரச் சந்தை ஏலம் தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களை திருப்புவனம் காவல் ஆய்வாளர் சேதுமணி மாதவன் உள்ளே அனுமதிக்காமல் தடுத்து, ஒருமையில் பேசி வாக்குவாதத்தில் ஈடுபட்டு அவமானப்படுத்தியதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.இந்தச் சம்பவம் சிவகங்கை மாவட்ட பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடக அமைப்புகள் மத்தியில் கடும் அதிருப்தியையும் கண்டனத்தையும் ஏற்படுத்தியுள்ளதாக சங்கம் தெரிவித்துள்ளது. சங்கத்தின் கோரிக்கைகள்:ஊடக வியலாளர்களிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டதாகக் கூறப்படும் காவல் ஆய்வாளர் சேதுமணி மாதவன் மீது உடனடியாக துறைரீதியான விசாரணை நடத்தி, உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.அரசு மற்றும் பொதுநல நிகழ்வுகளில் செய்தி சேகரிக்கச் செல்லும் ஊடகவியலாளர்களுக்கு தடையற்ற பணிச் சூழலையும், உரிய மரியாதையையும் காவல்துறை உறுதி செய்ய வேண்டும்.இவ்வாறு சிவகங்கை மாவட்ட பத்திரிகையாளர்கள் நல சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# ஆகாஷ் டெலிசன் வழக்கு: குற்றவாளிகளைக் கைது செய்யக் கோரி சிவகங்கை ஆட்சியர் அலுவலகத்தில் மனு

சிவகங்கை, ஜூலை .25-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஆகாஷ் டெலிசன் படுகொலை வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்றும், வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிகையின் நகலை அவரது குடும்பத்தினரிடம் வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தி, சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அவரது குடும்பத்தினர் மற்றும் ஆதரவாளர்கள் மனு அளித்தனர். கடந்த மார்ச் 5ஆம் தேதி விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட ஆகாஷ் டெலிசன், மார்ச் 8ஆம் தேதி உயிரிழந்தார். இது திட்டமிட்டு நடத்தப்பட்ட படுகொலை எனக் குற்றம்சாட்டி, அவருக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் கடந்த 102 நாட்களுக்கும் மேலாக தொடர் போராட்டங்கள் நடைபெற்று வருவதாக



மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும், சிபிசிஐடி (CB-CID) விசாரணையைத் தொடர்ந்து நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும், அதன் நகல் இதுவரை ஆகாஷ் டெலிசனின் பெற்றோர் அல்லது குடும்பத்தினரிடம் வழங்கப்படவில்லை என்றும் அவர்கள் குற்றம்சாட்டினர். உடற்கூறாய்வு அறிக்கை மற்றும் வழக்கு மாற்றம் தொடர்பாக உள்ள சட்டப்பூர்வமான சந்தேகங்களுக்கு உரிய விளக்கம் அளிக்க வேண்டும் என்றும், வழக்கில் தொடர்புடைய அனைத்து குற்றவாளிகளையும் உடனடியாக கைது செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சியரிடம் மனு மூலம் வலியுறுத்தப்பட்டது.இந்த மனு அளிக்கும் நிகழ்வில் ஆகாஷ் டெலிசனின் குடும்பத்தினர் மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் திரளாகக் கலந்து கொண்டு, "நீதி வேண்டும்" என்ற பதாகைகளை ஏந்தி தங்களது கோரிக்கைகளையும் கண்டனங்களையும் பதிவு செய்தனர்.

# தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது

தேனி, ஜூலை.25-

தேனி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகின்ற 30.07.2026 அன்று காலை 10 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறைதீர்க்கும் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில் நடைபெறவுள்ளதுஇக்கூட்டத்தில் மனு அளிக்க விரும்பும்




மாற்றுத்திறனாளிகள் தங்களது மாற்றுத்திறனாளி அடையாள அட்டை நகல், UDID அட்டை நகல், குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல் ஆகிய ஆவணங்களுடன் நேரிலோ அல்லது பாதுகாவலர் மூலமாகவோ விண்ணபிக்கலாம். எனவே இச்சிறப் புமாற்றுத்திறனாளிகளுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில்மாற்றுத்திறனாளிகள் மற்றும் சங்க நிர்வாகிகள் தங்கள் கோரிக்கை தொடர்பான மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தெரிவித்துள்ளார்.







■ சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் புதிய துணை பத்திர பதிவு அலுவலகத்தைஇயற்கை வளங்கள் துறை அமைச்சர் டாக்டர் டிகே.பிரபு மாவட்ட ஆட்சியர். ப.ஆகாஷ், முன்னிலையில் நேற்று திறந்து வைத்து குத்து விளக்கேற்றினார்கள் . உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் டி.இளங்கோவன் (மானாமதுரை)ஏ.குழந்தை ராணி நாச்சியார் (சிவகங்கை) ஆர்.சீனிவாச சேதுபதி (திருப்பத்தூர்) மற்றும் பத்திர பதிவு துறை உதவி தலைவர் ஸ்ரீனிவாசன்,மானாமதுரை சார்பதிவாளர் முகேஷ், ,பத்திர ஆவண எழுத்தர்கள் மற்றும் தவெக தெற்கு மாவட்ட செயலாளர் முத்து பாரதி மானாமதுரை நகர செயலாளர் நம்பிராஜன் தவெக நிர்வாகி மனோஜ் குமார் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர் .




■ சிவகங்கை மாவட்டம் சிவகங்கையில் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் டாக்டர் டிகே.பிரபு சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை, மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ், தலைமையில் வழங்கினார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.குழந்தை ராணி நாச்சியார் (சிவகங்கை) ஆர்.சீனிவாச சேதுபதி (திருப்பத்தூர்) டி.இளங்கோவன் (மானாமதுரை) மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி உட்பட பலர் உள்ளனர்.



■ தேனி மாவட்டம், தமிழக–கேரள மாநிலங்களை இணைக்கும் முக்கிய எல்லைப் பகுதியாக அமைந்துள்ள குமுளி வாகன சோதனைச் சாவடியில், தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் K.S.பிரவீன் கௌதம், நேரில் ஆய்வு மேற்கொண்டார்.ஆய்வின் போது, தேனி மாவட்டத்திற்குள் நுழையும் மற்றும் மாவட்டத்தை விட்டு வெளியேறும் அனைத்து வாகனங்களையும் உரிய முறையில், தீவிரமாக மற்றும் முழுமையான பதிவுகளுடன் சோதனை செய்யுமாறு காவல் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.மேலும், சோதனைச் சாவடியில் பொருத்தப்பட்டுள்ள CCTV கண்காணிப்பு கேமராக்கள் முழுமையாக செயல்படுகிறதா, அவற்றின் பதிவுகள் முறையாக சேமிக்கப்படுகிறதா என்பதையும் ஆய்வு செய்து, கண்காணிப்பு பணிகள் எவ்வித குறையும் இன்றி தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161